

# ஸத் ஸம்ப்ரதாயம் (உபாஸனா)

## ஸ்ரீ ஆச்சார்யாளின் அம்ருத உபதேசங்கள்



மனிதன் எப்பொழுதும் பகலானிடம் “உலகத்தில் எல்லோரும் சௌக்கியமாக இருக்கவேண்டும்" என்று ப்ரார்த்தனை செய்யவேண்டும். யார் மேலேயும் த்வேஷ பாவத்துடன் இருக்கக்கூடாது. பிறர் தனக்கு ஏதாவது தப்பு செய்தாலும், மன்னிக்கக்கூடிய மனப்பான்மை இருக்க வேண்டும். ப்ரதிஹிம்ஸை செய்யும் எண்ணம் ஒருநாளும் வரக்கூடாது. இதுதான் ஸந்புருஷனுடைய லக்ஷணம். யார் பிறருக்கு கஷ்டம் கொடுக்க விரும்புவானோ அக்கஷ்டம் அவனுக்கே தான் திரும்பவரும். சுவரில் எறிந்த பந்து, எறிந்தவன் மீதே திரும்பி விழுவதைப் போல்வரும்.

कन्दुकोभित्रिनिक्षिप्त इव प्रतिफलन्मुहुः ।आपतत्यात्मनि प्रत्यो दोषोऽन्यस्य चिकीर्षतः ।கந்து$^{3}$கோபி$^{4}$த்ரிநிக்ஷிப்த இவ ப்ரதிப$^{2}$லன்முஹு: ।ஆபதத்யாத்மனி ப்ரத்யோ தோ$^{3}$ஷோ(அ)ன்யஸ்ய சிகீர்ஷத: ||

இதைப்புரிந்து கொள்ளாமல் சிலர் பிறருக்கு எப்பொழுதும் கஷ்டங்களைக் கொடுக்க துணிந்து விடுவார்கள். யாராவது ஒரு நல்ல வார்த்தை சொல்லி நிறுத்தப் பார்த்தாலும் கேட்கமாட்டார்கள். துரியோதனன் யாருடைய நல்ல வார்த்தைகளையும் எடுத்துக் கொள்ளவில்லை. பாண்டவர்கள் மீது எல்லாவித துன்பங்களையும் கொடுத்து வந்தான். ஒரு நாளும் அவன் பண்ணின தவறுகளுக்கு பச்சாத்தாபமும் படவில்லை. மேலும் மேலும் செய்த கர்மங்கள் கடைசியில் அவனை அழித்துவிட்டது. ஆகையால் யாரும் பிறருக்கு தீங்கு நினைக்கக் கூடாது. அப்படி ஏதாவது தீங்கு செய்தாலும் உடனே மன்னிப்பு கேட்டு அந்தத் தவறு திரும்பவும் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யார் ஒருவன் தவறுகளையும் செய்து, பச்சாத்தாபமும் படாமல், மேலுக்கு மேல் அதே தவறுகளை செய்து வருவானோ அவன் கர்மங்கள் அவனை ஆழம் தெரியாத குழியில் தள்ளிவிடும்.

यस्तु पूर्वकृतं पापमविमृश्यानुवर्तते । अगाधपङ्के दुर्मेधा विषमे विनिपात्यते ।।
யஸ்து பூர்வக்ரு’தம்’ பாபமவிம்ருஶ்யானுவர்ததே | அகா$^{3}$த$^{4}$பங்கே து$^{3}$ர்மேதா$^{4}$ விஷமே விநிபாத்யதே||

இதை நன்றாக புரிந்து கொண்டு நல்லபடியாக வாழ்க்கை நடத்த ஆசிர்வதிக்கிறோம்.

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாசந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்)

நன்றி : ஸ்ரீ அம்மன் தரிசனம்



# ஷண்மதம் - ஆறு பிரிவுகள்

(புதுக்கோட்டை பூஜ்யஶ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

காணாபத்யம்

காணாபாத்யத்தின் ஆதி தெய்வமான கணபதி ஸ்வானந்த பவனம் எனும் உலகில் வசிக்கிறார். ஆதி முதல்வனான கணபதி 32 தத்துவங்களின் அடிப்படையில் 32 வடிவங்களில் விரிவடைவதாக தந்த்ர நூல்கள் கூறுகின்றன.

அந்த 32 வடிவங்கள் பின்வருமாறு: கணபதியின் 32 திரு உருவங்களும் அதற்குரிய ஸ்லோகங்களும்

**1.** பால கணபதி

கரஸ்த கதலீ சூத பநஸேக்ஷுக மோதகம்
பால ஸூர்ய ப்ரபாகாரம் வந்தேஹம் பாலகணபதிம்

தனது துதிக்கையோடு சேர்ந்த ஐந்து கரங்களில்,முறையே, மா, வாழை, கரும்பு, பலா, மோதகம் ஆகியவற்றைத் தாங்கியவரும், இளஞ்சூர்ய நிறத் திருமேனியை உடையவருமான, பால கணபதியை வந்தனம் செய்கிறேன்.



**2.** பக்த கணபதி

நாளிகேராம்ர கதலீ குளபாயஸ தாரிணம்
ஸரச்சந்த்ராப வபுஷம் பஜே பக்த கணாதிபம்

தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், வெல்லத்தாலான பாயஸம் நிறைந்த கலசம் ஆகியவற்றைத் தாங்கியவரும், குளிர் காலத்தில் மிக வெண்மையாக ஒளிரும் நிலவை விஞ்சும் வெண்ணிறத் திருமேனியை உடையவருமான பக்த கணபதியைத் துதிக்கிறேன்.

**3.** ஸக்தி கணபதி

ஆலிங்க்ய தேவீம் ஹரிதாம் நிஷண்ணம்



பரஸ்பராஸ்லிஷ்ட கடௌநிவேஸ்ய
ஸந்த்யாருணம் பாஸஸ்ருணிம் வஹந்தம்
பயாபஹம் ஸக்தி கணேஸமீடே

பச்சை நிறத்தவளான தேவியைப் பரஸ்பரம் ஆலிங்கனம் செய்த திருக்கோலத்துடன், மாலை நேரச் சூரியனின் இளமஞ்சள் நிறத் திருமேனியை உடையவரும், திருக்கரங்களில் பாசம், அங்குசம் ஆகியவற்றைத் தாங்கியவரும், (பக்தர்களின்) அச்சத்தைப் போக்குபவருமான ஸக்தி கணபதியை வணங்குகிறேன்.

**4.** ஸித்தி கணபதி

பக்வ சூத பலகல்ப மஞ்ஜரீ மிக்ஷூ தண்ட திலமோதகைஸ்ஸஹ
உத்வஹத் பரஸூஹஸ்த தே நம: ஸ்ரீ ஸம்ருத்தியுத தேவ பிங்கல

மாம்பழம், மலர்க்கொத்து, கரும்புத் துண்டு, எள்-கொழுக்கட்டை, பரசு ஆகியவற்றைக் கரங்களில் தாங்கிய, பசும்பொன் நிறத் திருமேனியை உடைய ஸ்ரீ ஸம்ருத்தி என்ற தேவியுடன் வீற்றிருக்கும் ஸித்தி கணபதியைத் துதிக்கிறேன்.

**5.** உச்சிஷ்ட கணபதி

நீலாப்ஜம் தாடிமீ வீணா ஸாலீ குஞ்ஜாக்ஷ ஸூத்ரகம்
தததுச்சிஷ்ட நாமாயம் கணேஷ: பாது மோக்ஷத:

சதுர்புஜம் ரக்ததனும் த்ரிநேத்ரம் பாஸாங்குசம் மோதகபாத்ர தந்தகம்
கரை: ததாநம் ஸரஸீருஹஸ்தம் உந்மத்த-முச்சிஷ்ட கணேசமீடே

நீலோற்பலம், மாதுளை, வீணை, நெற்கதிர், ருத்ராக்ஷமாலை இவற்றைத் தரித்தவரும், முத்தியளித்துக் காப்பவருமான உச்சிஷ்ட கணபதியின் பாதம் பணிகிறேன்.

நான்கு கரங்களை உடையவராகவும், அவற்றில் பாசம், அங்குசம், மோதக பாத்ரம், தந்தம் இவற்றைத் தரித்திருப்பவராகவும், செந்நிறமானத் திருமேனியும், முக்கண்ணும் உடையவராகவும், செந்தாமரைப் பூவிலே எழுந்தருளி இருப்பவராகவும், உந்மத்தராகவும் உள்ள உச்சிஷ்ட கணபதியை த்யானிக்கிறேன்.

(தொடரும்...)



# தசமஹா வித்யா

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)



பெண்மையின் சக்தியை தாய்மை முதல் சம்ஹாரம் வரை உணர்த்துபவர்கள் இந்த தேவியர்கள். இவர்களே ஸ்ரீசாக்த மார்க்கத்தின் ஆதிதேவியர்கள் ஆவார்கள். மேலும் மஹாவிஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களின் போது இந்த தேவியர்கள் ஒவ்வொருவரும்தான் ஆதார சக்தியாக இருந்தார்கள் என்று 'முண்டமாலா தந்திரம்' என்ற நூல் கூறுகிறது.

தசமஹவித்யா என்னும் பத்துவிதமான சக்திகள் பற்றி பார்த்தோம் அந்த பத்து மஹாசக்தியே இந்த ப்ரபஞ்சம் முழுவதையும் இயக்குகிறது

காளி : கரிய நீல நிறம் கொண்டவள். வெட்டுண்ட உடல்களை ஆடையாக அணிபவள். சிவனை பாதத்திற்கு அடியில் வைத்திருக்கும் அமைப்பு காளியின் உருவம்.

காலத்தை நிர்ணயிப்பவள் என்பதாலும், கருப்பு நிறத்தைக் கொண்டவள் என்பதாலும் 'காளி" என்று அழைப்படுகிறாள். கத்தி , சூலம், கபால மாலை தாங்கி மயானத்தில் வசிக்கும் இந்த தேவி அச்சமூட்டும் வடிவம் கொண்டவள். துர்சக்திகளை அழிக்கும் ஆற்றல் கொண்டவள். தட்சிண காளி என்ற வடிவில் வழிபட்டு வருகின்றோம்.

தாரா : நட்சத்திரத்தை போல ஒளி வீசுபவள். தனது மஹா சக்தியை உள்ளே வைத்து எளிமையாக காட்சியளிப்பவள்.

பக்தர்களை சம்சாரம் எனும் கடலில் மூழ்காமல் காத்து முக்தியை அருள்வாள். நரகசதுர்த்தசி அன்று காளி, தாரா வழிபாட்டால் பல மடங்கு பலன் கிடைக்கும். வாக்கு வல்லமை, அளவற்ற செல்வம், தந்து, ஞானமும், முக்தியும் கிட்டச் செய்யும் தேவி இவள். ஆலகாலம் உண்ட சிவனைத் தாங்கிய தேவி இவள். உலக இச்சையை கத்தரிக்கும் இந்த தேவியின் உபாசனை, ஏவல் சக்திகளை ஒடுக்கி ஞானம் அளிக்கும் வல்லமை கொண்டது. தாரா தேவி தாய்மையின் வடிவமாக போற்றப்படுகிறாள்.



திரிபுரசுந்தரி : பதினாறு வயது கன்னிகையின் உருவை கொண்டவள். நுட்பமான ஞானத்தை வழங்கியவள் .

ஸ்ரீவித்யா என்ற இந்த மூன்றாவது சக்தி ஷோடசி, திரிபுரசுந்தரி, லலிதாம்பிகை என்றெல்லாம் போற்றப்படுகிறாள். சக்திகளில் பேரழகு கொண்ட இவள் மோட்சம் அளிப்பவள். மாயைகளைக் கட்டவிழ்க்கும் மகாசக்தி. அறியாமை விலக்கி அருள் செய்யும் தேவி இவள்.

புவனேஸ்வரி : பூமியை காப்பாற்றும் நாயகி. மனதில் ஏற்படும் எண்ணங்களுக்கு காரணமானவள்.

அகிலத்தை தாங்கும் ஆதிசக்தி இவள். உலகின் உருவாக்கத்துக்கு காரணமான மகா சக்தியாக விளங்குகிறாள். தீயவற்றை அழிப்பவளாகவும், நல்லவற்றை உருவாக்குபவளாகவும் புவனேஸ்வரி விளங்குகிறாள். கேட்கும் வரங்களை அளிக்கும் தீனதயாபரி என்று புராணங்கள் வர்ணிக்கின்றன.

திரிபுர பைரவி : பைரவி என எல்லோராலும் அழைக்கப்படுபவள். முகத்தில் அழகும் உடலில் ஆவேசமும் கொண்ட வித்யாசமான உருவ அமைப்பு கொண்டவள்.

இவள் அருள் பெற்றால் எல்லாம் கிடைக்கும். மண்டை ஓட்டு மாலையை தரித்துள்ளதால் பக்தர்களின் மரண பயம் நீங்கும். ஜாத வேதஸே எனும் வேத மந்திரத்தினால் இவளைத் துதிக்க நிவாரணமும், தனலாபமும் கிட்டும். பைரவ மூர்த்திக்கு இணையாக வடிவம் கொண்ட சக்தி இவள். தீய அரக்கர்களையும், கொடிய சக்திகளையும் சம்ஹாரம் செய்யவென்றே தோன்றிய இவள் சித்த பைரவி, சைதன்ய பைரவி, ருத்ர பைரவி, திரிபுரா பைரவி, கால பைரவி, சண்ட பைரவி, வீர பைரவி என பதினாறு வடிவங்கள் கொண்டவள். இவளை வழிபட மரண பயம் நீங்கும் என்பர்

சின்னமஸ்தா: தலையற்ற உடலுடையவள். தலை கழுத்து பகுதியில் இருந்துவரும் ரத்தத்தை தனது கைகளில் உள்ள பாத்திரத்தில் பிடிக்கும் உருவம் இவளுடையது. ஆண் - பெண் உடலின் மேல் நர்த்தனம் ஆடும் நிலையில் காட்சி அளிப்பவள்.

பிரசண்ட சண்டிகா என்ற பெயரில் அகோரிகள் வழிபடும் தேவி இவள். தீயசக்திகளை வசப்படுத்த இவளை சாக்த வழிபாட்டில் வழிபட்டனர்.

(தொடரும்...)



# நவராத்திரி

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த மஹாஸ்வாமிகள்)

வருடத்தின் ஒவ்வொரு மாதத்திலும் வரும் அமாவாசை முதல் நவமி வரையிலான திதிகள் அம்பிகைக்கு உரியனதான். 12 மாதங்களுக்கும் பன்னிரண்டு விதமான நவராத்திரிகள் உண்டு என்கின்றன சாக்த சாஸ்திரங்கள். அந்த பன்னிரண்டிலும் மிக முக்கியமானவை நான்கு நவராத்திரிகள். அவற்றுள் ச்யாமளா நவராத்ரி குறித்து நாம் பார்த்தோம்.



நான்கு நவராத்திரிகளில் ஆஷாட நவராத்திரி மிகவும் விசேஷமானதாகக் கருதப்படுகிறது. ஆஷாட மாதம் என்பது சந்திரனை அடிப்படையாகக்கொண்ட மாதங்களில் ஒன்று. இந்த மாதம் ஆனிமாத அமாவாசையோடு தொடங்கி ஆடி மாத அமாவாசை முன் தினத்தோடு முடிவடையும். ஆனிமாத அமாவாசைக்கு மறுதினம் தொடங்கி அடுத்த ஒன்பது நாள்களும் நவராத்திரி விழாவாகக் கொண்டாடப்படும். இந்த நவராத்திரிக்கு உரிய தேவி வாராஹி அம்மன்.

வராஹம் என்றால் காட்டுப்பன்றி என்று பொருள். அது சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்களையே தாக்கும் தன்மையுடையது. தனது குட்டிகளுக்கு ஒரு துன்பமும் யாராலும் வர அது அனுமதிக்காது. பன்றி முகம் கொண்ட வாராஹிதேவியும் தன் பக்தர்களை அனைத்து வகை இன்னல்களிலிருந்தும் காப்பாற்றுபவள்.

வாராஹியை வழிபட உகந்த திதி பஞ்சமி. ஒவ்வொரு மாதமும் வளர்பிறை தேய்பிறை என இருகாலங்களிலும் வாராஹியை வழிபட வேண்டும் என்றாலும் ஆஷாட நவராத்திரியில் வரும் பஞ்சமி திதி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. வாராஹிக்குரிய அர்ச்சனை மந்திரங்களில், `ஆஷாட பஞ்சமி பூஜன ப்ரியாயை நமஹ' என்று ஒரு வரி வரும். ஆஷாட மாத பஞ்சமியில் செய்யப்படும் பூஜையைப் பிரியமுடன் ஏற்பவள் அன்னை என்பது இதன் பொருள். நவராத்திரியில் பஞ்சமி திதி நடு நாயகமான தினம். அதனாலேயே அவளுக்குப் பஞ்சமி வழிபாடும் ஏற்பட்டது. அன்னைக்கே பஞ்சமி என்ற திருநாமம் உண்டு. (தொடரும் ...)



# தேவி வழிபாடு

(புதுக்கோட்டை பூஜ்யஸ்ரீ ப்ரணவாநந்த ஹாஸ்வாமிகள்)



**2.** பகமாலினி: இந்த நித்யா தேவியின் மந்திரத்திலும், இவளின் பரிவார தேவதைகளின் மந்திரங்களிலும் ‘பக’ எனும் சப்தம் அடிக்கடி விடுவதால், இவள் பகமாலினி என்று அழைக்கப்படுகிறாள். பகம் என்ற சொல்லுக்கு பரிபூர்ணமான ஐஸ்வர்யம், தர்மம், தேஜஸ், ஞானம், வைராக்யம், வீர்யம், முக்தி என்றெல்லாம் பொருளுண்டு. இவற்றுடன் அம்பிகை கூடியிருப்பதால் பகமாலினி ஆனாள். பகத்தோடு கூடிய சகல பொருட்களும் இவளுடைய அம்சம் ஆதலால் தேவிக்கு பகவதி எனும் பெயரும் உண்டு. சிவந்த நிறமுள்ளவள். சிவப்புக் கற்களால் ஆன நகைகளை அணிவதில் மகிழ்பவள். அழகு பொலியும் திருமுகத்தினள். சதா தவழும் புன்முறுவலுடன் திகழ்கிறாள். முக்கண்களுடனும் இடது கரங்களில் அல்லி மலர், பாசக்கயிறு, கரும்பு வில் ஏந்தியும் வலது கரங்களில் தாமரை, அங்குசம், புஷ்ப பாணங்களை தரித்தும் தோற்றம் தருகிறாள்.

மந்திரம்:
ஓம் பகமாலின்யை வித்மஹே ஸர்வ வஸங்கர்யை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்



வழிபட வேண்டிய திதிகள்: சுக்ல பக்ஷ த்விதியை, கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசி.

வழிபடு பலன்கள்: வாழ்வில் வெற்றிகளைக் குவிக்கலாம். கர்ப்பத்திலுள்ள சிசு பாதுகாக்கப்பட்டு, சுகப்பிரசவம் ஏற்படும்.

**3.** நித்யக்லின்னா : நித்யக்லின்னா என்றால் கருணை மிகுந்தவள் என்று பொருள். இவளின் இதயம் என்றும் கருணையிலேயே ஊறிப்போனதாம்! இவளின் மகிமையைப் பற்றி கருட புராணத்தில், ‘நித்யக்லின்னா மதோவக்ஷயே த்ரிபுரம் புக்தி முக்திதாம்’ எனக் கூறப்பட்டுள்ளது. இந்த அம்பிகையைத்



துதிப்போர் மூவுலகிலும் புக்தி சக்தியோடு வாழ்வர் என்று பொருள். சிவந்த நிறம், சிவந்த கரங்கள், புன்முறுவல் சிந்தும் திருமுக மண்டலம், முக்கண்கள், நெற்றியில் அரும்பும் வியர்வைத் துளிகளுடனும், திரு முடியில் பிறைச்சந்திரனுடனும் அருட்பாலிக்கும் இந்த தேவிக்கு 'மதாலஸா' என்ற பெயரும் உண்டு. தன் நான்கு கரங்களிலும், பாசம், அங்குசம், பான பாத்திரம், அபய முத்திரை தரித்தவள். அணிகலன்கள் அன்னையை அலங்கரிக்கின்றன.

மந்திரம்:
ஓம் நித்யக்லின்னாயை வித்மஹே நித்ய மதத்ரவாய தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்

வழிபட வேண்டிய திதிகள்: சுக்லபட்ச த்ருதியை, கிருஷ்ணபக்ஷ திரயோதசி.

வழிபடு பலன்: குடும்ப ஒற்றுமை ஓங்கும். வீண் தகராறுகள் எதுவும் வராது.

**4.** பேருண்டா நித்யா : அனைத்து அண்டங்களிலும் நிறைந்துள்ள தேவி, அகிலத்துக்கே ஆதிகாரணியாகத் துலங்குபவள். அநேக கோடி அண்டங்களைப் படைத்தவள். அவற்றை உருவாக்கியதால் இந்த அன்னைக்கு 'அநேக கோடி ப்ரமாண்ட ஜனனீ' என்றும் ஓர் திருநாமம் உண்டு. உருக்கி வார்த்த தங்கம் போன்ற மேனியில் பட்டாடைகளையும், குண்டலங்கள், பொன் ஆரங்கள், முத்துமாலை, ஒட்டியாணம், மோதிரங்களைத் தரித்து, நிகரற்ற அழகுவல்லியாகத் திகழும் இவள் முக்கண்கள் தரித்தவள். புன்முறுவல் பூத்து தரிசிப்போரைப் பூரிக்க வைக்கிறார். தன் கர கமலங்களிலும் பக்தர்களின் பாதக மலங்களை அழிக்க பாசம், அங்குசம், கத்தி, கோதண்டம், கவசம், வஜ்ராயுதம் தரித்துள்ளாள். தேவியின் திருவடித் தாமரையைத் தாமரை மலர் தாங்குகிறது.



மந்திரம்:
ஓம் பேருண்டாயை வித்மஹே விஷஹராயை தீமஹி
தன்னோ நித்யா ப்ரசோதயாத்

வழிபட வேண்டிய திதிகள்: சுக்ல பக்ஷ சதுர்த்தி, கிருஷ்ண பக்ஷ துவாதசி.


வழிபடு பலன்கள்: விஷ ஆபத்துகளிலிருந்து மீளலாம்.
(தொடரும்…)



# ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திவ்ய சரித்திரம்

**1.**ஸ்ரீ குருநாதர் மஹிமை

இவர்கள் பீடாதிபத்யம் வஹித்த 62 வருஷ காலத்தில் 40 வருஷ காலம் ஸஞ்சாரத்திலேயே இருந்திருப்பதாகத் தெரிகிறது. இவர்களுக்கு தேவபாஷையான ஸம்ஸ்கிருதம், தாய் பாஷையான தெலுங்கு, தேசபாஷையான கன்னடம், இவை தவிர தமிழ், மஹாராஷ்டிரம், குஜராத்தி, ஹிந்துஸ்தானி முதலான பல பாஷைகளிலும் நல்ல பரிச்சயம் உண்டு. இவர்கள் ஸஞ்சாரம் செய்யும் இடங்களிலெல்லாம் ஜனங்கள் எல்லாருமே விசேஷமான பக்தியுடன் ஆராதித்து இவர்களுடைய அனுக்ரஹத்திற்குப் பாத்திரமானார்கள். அந்த காலத்திலிருந்த மைசூர், திருவனந்தபுரம், புதுக்கோட்டை, பூனாபேஷ்வா, ஸிந்தியா, ஹோல்கார், கைக்வார் முதலான ஸம்ஸ்தானங்களின் மன்னர்களும், ஜமீன்தார்களும், ஜாகீர்தார்களும், விசேஷமாக பக்தி சிரத்தையுடன் இவர்களை ஆராதித்து வந்ததுடன், வர்ணாசிரம ஆசார விசார பரிபாலன விஷயத்திலும் மிகவும் அனுகூலப் படுத்திக் கொடுத்தார்கள்.




இவ்விஷயம் அக்காலத்திய சாஸனங்களாலும் பத்திரங்களாலும் நன்கு தெரியவருகிறது. தன்னுடைய அபாரமான யோக்கியதையினாலும் சக்தியினாலும் சிருங்கேரி ஸம்ஸ்தானத்தின் கீர்த்தியை மிகவும் பரவும்படிச் செய்தார்கள். ஸம்ஸ்தானத்திற்கு பலவிதங்களில் சொத்துக்களும் வருமானங்களும் ஏற்படுத்தினார்கள். விலை மதிக்க முடியாத அநேக ரத்னாபரணங்களை சேகரித்தார்கள். மஹாராஜாக்களிடமிருந்தும் மற்ற பிரபுக்களிடமிருந்தும் காணிக்கைகளும் வருஷ வருமானங்களும் கிடைத்தன.



குவாலியர் ஸம்ஸ்தானாதிபதி ஜயாஜிராவ் ஸிந்தியா அவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூ.500-ம், இந்தூர் மஹாராஜா துக்கோஜிராவ் ஹோல்கார் ரூ.200-ம், அக்கல்கோடு ஷஹாஜி ராஜா பான்ஸ்லே ரூ. 150-ம், தார் ஸம்ஸ்தானத்தைச் சேர்ந்த யஸுவந்தராவ் போவர் ரூ.100-ம், சாசுவதமாய் வருஷம் தோறும் கொடுப்பதாக ஏற்பாடு செய்தார்கள். 1827-1828-ல் மைஸூருக்கு விஜயம் செய்திருந்த ஸமயம் மைஸூர் மஹாராஜா அவர்கள் பெலவாடி முதலிய மூன்று கிராமங்களை ஸர்வமான்யமாக தானம் செய்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் உத்திரதேச யாத்திரைபோய் வெகுநாளாக தகவல் தெரியாமலிருந்த ஸமயம் மைஸூர் மஹாராஜா கிருஷ்ணராஜ உடையாரவர்கள் விக்ஞாபன பத்திரிகைகள் மூலம் பலதடவை பிரார்த்தித்துக்கொண்டதற்கு இசைந்து மைஸூர் திரும்பிவந்து மஹாராஜாவுக்கு தர்சனம் கொடுத்து சிவகீதையையும் உபதேசித்து அனுக்ரஹித்த ஸமயம் அம்மஹாராஜா தன் பக்தியையும் நன்றியையும் காட்டுவதற்காக வருஷம் ஒன்றுக்கு ரூ.12,000 கொடுத்துவருவதாக ஏற்றுக்கொண்டார்.

மைஸூர் ஸம்ஸ்தானத்திற்கும் சிருங்கேரி பீடத்திற்குமுள்ள ஸம்பந்தம் வெகுநாள் பட்டதுடன், வெகு நெருங்கியதும்கூட என்ற விஷயம் யாவரும் அறிந்ததே. இவ்விதமாக வெல்லாம் ஸ்ரீமடத்தின் லௌகிகஸௌகர்யங்களை அபிவிருத்தி செய்துவந்தார்கள். ஸ்ரீமடத்து ஆளுகையிலுள்ள தேவாலயங்களை மிகவும் சிறப்பாக நடத்திவந்ததுடன் வெளியிலுள்ள அநேக ஆலயங்களில் பலவிதமான கைங்கர்யங்கள் செய்திருக்கிறார்கள். ஒரு ஸமயம் யாத்திரையிலிருந்து சிருங்கேரிக்கு திரும்பும்போது சாமராஜ நகரத்திலுள்ள சாமராஜேசுவர ஸ்வாமிக்கு ஒரு ரதம் செய்து அர்ப்பணம் செய்தார்கள். அநேக வித்வான்களுக்கும் அண்டின ஜனங்களுக்கும் ஜீவனத்திற்காக சிருங்கேரியில் இனாம் ஸர்வமான்ய விருத்திகளையும் ரொக்க மானியங்களையும் ஏற்படுத்தி வெகுவாக போஷித்து வந்தார்கள்.

இவ்விதம் விளங்கிவருகையில் தனக்கு 60-வது வயது நெருங்கும் ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யாருக்கு, தனக்கு ஆசிரம ஸ்வீகாரமான ஆறாவது தினத்திலேயே தன் குரு விதேஹ முக்தியடைந்து விட்டபடியால் தனக்கேற்பட்ட அஸௌகர்யங்களை நினைத்து, தான் திருடமாயிருக்கும் போதே யோக்கியரான சிஷ்யரை பரிக்ரஹம் செய்து அவருக்கு ஆசிரம ஸம்பிரதாயங்களையும் ஸம்ஸ்தான ஸம்பிரதாயங்களையும் நன்கு தெரிவித்து வித்தியாப்யாஸமும் கிரமமாய் நடத்தி ஸம்ஸ்தானத்தின் ஆதிபத்தியத்திற்கு தகுதியுள்ளவராகச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது.

(தொடரும்….)



# श्रीमन्नारायणीयम्
## ஸ்ரீமந்நாராயணீயம்

### प्रथमस्कन्धपरिच्छेदः
ப்ரத2மஸ்கந்த4பரிச்சே2த3:

### १. श्रीभगवन्महिमानुवर्णनम् (स्रग्धरा)
**1.** ஸ்ரீப4க3வன்மஹிமானுவர்ணனம் (ஸ்ரக்3த4ரா)



कष्टा ते सृष्टिचेष्टा बहुतरभव-खेदावहा
जीवभाजा-
मित्येवं पूर्वमालोचित- मजित मया
नैवमद्याभिजाने ।
चेज्जोवाः कथं वा मधुरतरमिदं
त्वद्वपुश्चिद्रसाई
नेत्रैः श्रोत्रैश्च पोत्वा परमरस सुधांभोधि पूरे
रमेरन् ।। ७ ।।

भावाय नमः

கஷ்டா தே ஸ்ரு’ஷ்டிசேஷ்டா
ப3ஹுதரப4வ-கே2தா3வஹா ஜீவபா4ஜா-
மித்யேவம்’ பூர்வமாலோசித- மஜித
மயா நைவமத்3யாபி4ஜானே .
சேஜ்ஜோவா: கத2ம்’ வா
மது4ரதரமித3ம்’ த்வத்3வபுஶ்சித்3ரஸாஈ
நேத்ரை: ஶ்ரோத்ரைஶ்ச போத்வா
பரமரஸ ஸுதா4ம்போ4தி4 பூரே ரமேரன்
.. 7 ..

பா4வாய நம:

வெல்லப்படாதவரே! ஜீவர்களுக்குப் பலவகையான துக்கத்தை விளைவிக்கும் உம்முடைய சிருஷ்டி காரியம் இவ்வுலகில் கொடுமையானது என்றே என்னால் முன்பு கருதப்பட்டது. இப்பொழுது அப்படி எண்ணவில்லை. ஜீவர்களை சிருஷ்டிக்காவிட்டால் சிதானந்த ரஸம் நிறைந்த இந்த மதுரமான உமது திருமேனியை கண்களால் பருகியும் காதுகளால் துதியைக்கேட்டும் இந்தப் பரமானந்த அமுதக்கடலில் யார் எப்படி இன்புறுவார்கள்?

பா4வ: = எல்லாவற்றின் இருக்கையாகவும், இருக்கும் பொருளாகவும் இருப்பவர்.



नम्राणां सन्निधत्ते सततमपि पुरस्तैरनभ्यर्थितान-
प्यर्थान् कामानजस्रं वितरति परमानन्दसान्द्रां गतिं च ।
इत्थं निश्शेषलभ्यो निरवधिकफलः पारिजातो हरे त्वं
क्षुद्रं तं शक्रवाटीद्रुममभिलषति व्यर्थमर्थिव्रजोऽयम् ॥ ८ ॥

भूतात्मने नम :

நம்ராணாம்’ ஸந்நித⁴த்தே ஸததமபி புரஸ்தைரனப்⁴யர்தி²தான-
ப்யர்தா²ன் காமானஜஸ்ரம்’ விதரதி பரமானந்த³ஸாந்த்³ராம்’ க³திம்’ ச |
இத்த²ம்’ நிஶ்ஶேஷலப்⁴யோ நிரவதி⁴கப²ல: பாரிஜாதோ ஹரே த்வம்’
க்ஷுத்³ரம்’ தம்’ ஶக்ரவாடீத்³ருமமபி⁴லஷதி வ்யர்த²மர்தி²வ்ரஜோ(அ)யம் || 8 ||

பூ⁴தாத்மனே நம :

ஹே ! குருவாயூரப்பா ! வணங்குபவர்களின் முன் எப்பொழுதும் இருப்பதும் கேட்கத் தெரியாதவர்களுக்கும் அவர்கள் மனதிலிருக்கும் ஆசைகளைப் பூர்த்தி செய்யும் அர்த்தங்களை எப்பொழுதும் கொடுப்பதும், பரமானந்தம் நிறைந்த மோக்ஷத்தையும் அளிப்பதும், இப்படி எல்லோராலும் அடையக் கூடியதும் அளவிலாத பலனைத் தருவதுமான கற்பக விருக்ஷம் நீர் ஒருவரே .அப்படி இருந்தும் பிரார்த்திப்பவர்களின் கூட்டம் இந்திர லோகத்தில் ஸ்வர்க்கத்திலுள்ள அற்பமான கற்பகத்தை வீணில் விரும்புகிறது. என்ன கஷ்டம் .



பூ⁴தாத்மா = எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக இருப்பவர்.

(தொடரும்…)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்